**ஆரம்பக்கல்வி ஆங்கில பாட ஆசிரியர் நேர்முகத்தேர்வும் கொவிட் - 19 பாதுகாப்பு ஏற்பாடுகளும்**

1. வட மாகாண கல்வி அமைச்சினால் 120 ஆங்கில டிப்ளோமாதாரர்கள் நேர்முகத்தேர்விற்காக எதிர்வரும் 06.03.2021, 07.03.2021 மற்றும் 08.03.2021 ஆம் திகதிகளில் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.
2. நேர்முகத்தேர்விற்காக வருகைதரும் சகல டிப்ளோமாதாரர்களும் கொவிட் - 19 பாதுகாப்பு முறைகளை முறையாகக் கடைப்பிடிப்பதுடன் முகக் கவசம் அணிந்திருத்தல் அவசியமாகும்.
3. விண்ணப்பதாரர்கள் அல்லது அவ் விண்ணப்பதாரரைச் சார்ந்தவர்கள் கொவிட் - 19 தொற்றுக்குள்ளாகியிருப்பின் / விண்ணப்பதாரருக்கு தொற்றிருக்கலாம் எனும் சந்தேகத்தின் அடிப்படையில் அல்லது அவ் விண்ணப்பதாரரைச் சார்ந்தவர்களுக்கு தொற்று இருக்கலாம் எனும் அடிப்படையில் விண்ணப்பதாரர் அல்லது அவரைச் சார்ந்தவர்கள் சுயதனிமைப்படுத்தலில் இருப்பார்களேயானால் அவர்கள் நேர்முகத்தேர்விற்கு வருகை தருதல் தவிர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அது பற்றி தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் ஊடாக மட்டும் தகவல் வழங்க முடியும்.

மேற்குறித்த விடயம் தொடர்பாக விண்ணப்பதாரர்கள் மிக அவதானமாக செயற்பட்டு தங்களையும் தங்களைச் சார்ந்தவர்களையும் பாதுகாப்பதற்கு உதவுவீர்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**முக்கியம் :**

i. நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்பட்டு கொவிட் - 19 காரணமாக வருகைதரமுடியாதவர்கள் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் ஊடாக தகவல் அளித்திருப்பின் அவர்களுக்கு பிறிதொரு தினத்தில் நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சையினை நடாத்துவதற்குத் தேவையான ஒழுங்குகள் வட மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ii. இதனால் விண்ணப்பதாரர்கள் எவ்வித அசௌகரியங்களையும் எதிர்கொள்ளத் தேவையில்லை என அறிவிக்கப்படுகிறது.

iii. மின்னஞ்சல் ஊடாக தகவல் அளிக்கப்பட்டதும் அதற்கான பதில் எழுத்து மூலமாக வழங்கப்படும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : 021 223 1343**

**மின்னஞ்சல் முகவரி : appointmentmoe@gmail.com**